RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1352

OPEN ACCESS

# திருவாசகத்தில் இலக்கியக் கோட்பாடுகள்

க. புவனேஸ்வரி [அ], க. விஜயலெட்சுமி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா.

# Thiruvasagam's Literary Principles

K. Bhuvaneswari [a], K. Vijayalakshmi [a, *]

[a] Department of Tamil, National College, Tiruchirapalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: kanapathiviji@gmail.com

Received: 30-05-2022
Revised: 03-09-2022
Accepted: 08-09-2022
Published: 28-11-2022

## ABSTRACT

In this article, the nature of literary principles in Thiruvasagam, the eighth of the Panniru Thirumurai has been highlighted. Moreover, devotional literature is an important milestone in the development of the Tamil language. The principle of devotional literature, along with the principles of divine consciousness, humanity, ethics of attaining God, principles of attaining God, and throughout the Thiruvasagam song, Manickavasagar's devotional principle of compassion, the compassion of love, humanity, compassion, metaphysics, suffering, etc., can be attained by crying, and Manickavasagar's interconnection with God as a culmination of the spiritual journey. Tamil is known to be so intertwined that it can be said to be the language of devotion. Tamil was very helpful in the promotion of religion. That's why literature grows. Religion also developed, and the two great religions, Saivism and Vaishnavism, created separate literature emphasizing their own doctrines and the doctrine of God. Saivism consists of Panniru Thirumuraikal and fourteen shastra books, which are holy shastra texts that propagate its ideology. Manickavasagar's Thiruvasagam and Thirukkovaiyar are praised as the eighth Thirumarai. The famous Thiruvasagam written by Manickavasagar, can be said to be a treasure trove of gracious tears. It can be said that all thiruvasagam songs are a collection of various kinds of literature, such as precious pearls.

**Keywords:** Manickavasagar, Thiruvasagam, Thirumarai, Literary Principles

## முன்னுரை

சைவத் திருமுறைகளுள் சிவபெருமானின் ஐந்தொழில்களை உணர்த்தும் பஞ்சாக்கர மந்திரத்துடன் 'நமசிவாய' என்று தொடங்கப்பட்ட பக்தி நூல் தான் திருவாசகம். தொடக்கத்திலேயே பஞ்சாக்கரத்தைப் போதித்துப் பேரின்ப வீட்டைக் காட்டுவதால், திருவாசகத்தை ஞானநூல் என்றே கூறலாம். மேலும் திருவாசகத்தை நாட்டுப்புற பக்தி இலக்கியம் என்றும், தெய்வீகமான காதல் இலக்கியம் என்றும் சொல்ல வாய்ப்புள்ளது. பாமர மக்களும் எளிதில் புரிந்து கொண்டு பேரின்ப நிலை அடையும் விதமாக அமைந்துள்ளது. சைவ சமயத்தின் தத்துவத்தைக் கூறுவதால் திருவாசகத்தை 'சைவசமயக் கருவூலம்' என்று அடியார்கள் கூறியுள்ளதையும் இங்கு நாம் மனதில் நிறுத்த வேண்டும்.

திருவாசகம் அள்ள அள்ளக் குறையாத ஒரு ஞானக்கடல் போன்றுள்ளது. கடல் நீரோ உவர்ப்பு தன்மை நிறைந்துள்ளது. ஆனால் திருவாசகக் கடலிலோ கருணைத் தேன் நிறைந்துள்ளது. எத்தனை முறை குடித்தாலும் தெவிட்டாத தேனாகும். அதனால் தான் மாணிக்கவாசகர் சிவபெருமானின் திருவடி ஒன்றையே தம் உயிர் மூச்சாய் எண்ணி வழிபட்டார்.

## நூற்பெருமை

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் பாட சிவபெருமான் பொற்கரத்தால் எழுதப்பெற்ற ஒரு பக்திநூல், ஞானநூல் என்றும் கூறுவர். திருவாசகம் 51 பகுதிகளாக 658 பாடல்களைக் கொண்டது. மாணிக்கவாசகரின் திருவாசகம் உபநிடதம் போன்றது. தலயாத்திரை குறைவு. தேவார மூவரும் கோயில் கட்டியதாக வரலாறு இல்லை. மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் ஆவுடையார் கோயில் கட்டினார்.

## உலகரியச் செய்த போப்

உலகப் பொது நூலாகிய திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் ஜி.யு. போப் அவர்கள், அதை அடுத்ததாக திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தோடு மட்டுமின்றித் திருவாசகத்தின் பக்திச் சுவையை உலகறியச் செய்தார் என்ற பெருமையும் அவருக்கே உரியதாகும்.

## திருவாசகத்தைப் பற்றிய பழமொழி

பழமொழிகள் கற்றாரும் மற்றாருமாகிய எல்லார் வாயிலும் ஒப்பப்பழகி வருவன. அதனால் தான் திருவாசகத்தைப் பற்றி பல பழமொழிகள் இன்று வரை உள்ளன.

“திருவாசகத்துக்கு உருகாதார்

ஒரு வாசகத்துக்கும் உருகார்”

மக்களின் மன உறுதியை அளந்தறியும் அளவு நூலாகத் திருவாசகத்தைக் கருதியிருந்தார்கள். ஆதலால் மனத்தையுருக்கும் தனிச்சிறப்புடையது திருவாசகம். அதற்கு உருகாதார் மனமே இல்லை (Thangavelan, 2006).

## மாணிக்கவாசகரின் இறைநெறிக் கோட்பாடு

இறை நெறி என்பதற்குத் தமிழ் அகராதியில் இறை என்றால் கடவுள் என்றும் நெறி தேடுதல். இறைவனை அடைவதற்கான உயர்ந்த வழி அவனை நாடுதல் தேடுதல் என்றும் கூறுதல். வழிபடுதல் என்றும் வழிபாடு எனவும் இறைநெறியில் ஒழுகுதல் என்றும் பொருள் படும். இறை நெறி என்பது அன்பு, அறிவு, அருள், இரக்கம் என்னும் நான்கின் அடிப்படையில் அமைவது. இறைவன் அன்பு வடிவானவன், அறிவு வடிவானவன், கருணைக்கடலானவன். இங்கு கருணை என்பது இரக்கமாகும். இந்நான்கின் படிநிலைகளின் வாயிலாக ஒழுகும் ஒழுக்கமே இறை நெறியாகும்.

திருவாசகமோ ஆன்மா இறையுடன் கொள்ளும் உறவுக்குச் சிறப்பிடம் தருகிறது. உயிர் இறைவனோடு கொண்ட உறவில், ஓர் இடையூறு ஏற்பட்டு, அவ்வுயிர் பிரிவுத்துயிர் தாங்காமல், தான் செய்த தவறுகளுக்காக நெக்குருகி, வருந்தி, அழுது அரங்கேறிய நிலையில் பாடப்பெற்றவையே திருவாசகம் ஆகும்.

## அனுபவ முதிர்ச்சி

உலகில் தோன்றிய ஒவ்வோரான்மாவின் அனுபவமாகவும் திகழ்கிறது. இறைவன் தானே வந்து, மாணிக்கவாசகரை வலிய அழைத்து, கடைக்கண்ணால் அருளி, திருவைந்தெழுத்தை ஓதிச் சென்னயில் பாதமலர்களை வைத்துத் திருவடித் தீக்கை செய்ததால் அவர் ஞானநிலை வரப்பெற்றார். அம் மகிழ்ச்சியில் தான் பெற்ற இறையருளைப் பற்றிப் பாடியவையே அச்சோப்பதிகம், சென்னிப்பத்து, அற்புதப்பத்து என்பனவாகும். பிடித்தபத்து, கோயில் திருப்பதிகம் அவரின் சூழ்நிலையையும் மனநிலையையும் வெளிப்படுத்துகின்றன.

ஆட்கொள்ளப்பட்ட ஆன்மா களிப்பில் துள்ளிக்குதித்தாடி மகிழ்கிறது. அஃது இறைவனுக்காகத் தெள்ளேணம் கொட்டுகிறது. திருத்தோணோக்கம் ஆடுகிறது திருவுந்திபாடுகிறது திருப்பூவல்லி கொய்கிறது திருக்கோத்தும்பியை இசைக்குமாறு அனுப்புகிறது! அப்படிப்பெற்ற அருட்செயலால் தான் இறைவனுக்கு நன்றி கூறுவதாக, அவன் புகழைப்பாடிப் பாடி மகிழும் மனப்போக்கையே திருவெம்பாவையிலும் காண்கிறோம்.

இங்ஙனம் அவர் கொண்ட மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் வெளிப்படுத்தும் பதிகங்கள் பல உள்ளன. இவை தவிர, நாள் ஆக ஆக பிரிந்த இறைவனைக் கூடும் வேட்கையைப் புலப் படுத்துவனவும், கூடுதல் வாய்க்காதோ என ஐயமுற்று அரங்கேறும் நிகழ்ச்சியை அழுதும், உலகப் பாசபந்தத்துயரங்களின்றும் தம்மை விடுவித்தருளுமாறு வேண்டிக் கரைந்துருகுவனவும் என்னைக் கைவிட்டுவிடாதே' எனக் கொஞ்சவனவுமான பல பதிகங்கள் உள்ளன.

இங்கு இறைவனைப் பிரிந்து காலம் ஆக ஆகப் பிரிவுத்துயர் பெருகிச் உலக அல்லல்களால் துன்பம் நேரிட்டபோது அவ்வுயிர் செத்திலாப் பத்து, வாழாப்பத்து, குழைத்தப்பத்து, பிரார்த்தனைப் பத்து போன்றவற்றைப் பாடி அழுது, தொழுது இறைவனை வழிபாடுகின்றார்.

அவ்வுயிர் ஏன் நீத்தல் விண்ணப்பம் பாடுகிறது? என்ற வினாவும் எழுகிறது. அதற்கு 'என்னைக் கைவிட்டு விடாதே' என்ற காரண காரியத்தோடு கெஞ்சுவதை அதில் பார்க்க முடியும். மேலும் யாத்திரைப் பத்து, திருப்படைஎழுச்சி, என்ற பகுதி உயிர் வானுலகை ஆளச்செல்லும் இறுதிநிலை பற்றியன. இப்படி நோக்கும் போது ஒரு முதலும் ஒரு முடிவும் உடைய நிகழ்ச்சித் தொடர்பு, திருவாசகத்திலுள்ள, 656 பாடல்களிலும் காணக்கிடைக்கின்றது. அதாவது மாணிக்கவாசகருள் ஒரு முழுமைத்தன்மையுடையனவாய் அப்பாடல்கள் திகழ்ந்தை நம்மால் உய்த்து உணரமுடிகிறது.

## தனிமனிதரும் சமுதாயமும் சார்ந்த கோட்பாடுகள்

மாணிக்கவாசகர் தம் அனுபவத்தை, உலக அனுபவமாக்கியே கூற விழைகின்றார். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், சோதனைகள், விளைவுகள், தீர்வுகள் யாவும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏற்படும். அத்தகைய நிகழ்வுகளைச் சுட்டும் குறியீடுகளான தனி ஒரு மனிதரின் வாழ்க்கை, அனுபவம் என்றும் சொல்லலாம்.

## துன்பநிலை

அடிகளார் பாடிய துன்பநிலை, பிரிவுபற்றிய பாடல்களிலேயே, மீண்டும் அடுத்தடுத்த பகுதியில் நீத்தல் விண்ணப்பம், பிடித்தபத்து, அருள்பத்து, கண்டபத்து போன்ற பல பகுதியில் பிரிவும்வேட்கையும் நிலையும் பொதிந்து இருக்கின்றன.

"மெய்ப்பால் நரம்பு கயிறாக

மூளை என்பு தோல் போர்த்த

குப்பாயம் புக்கு இருக்ககில்லேன்

கூவிக் கொள்ளாய்! கோவேயோ!"

இப்பாடலில் திருவடித்தீக்கை பெற்றதை எண்ணியெண்ணி இன்புற்றுப் பாடிய பாடல்கள் பலவற்றைப் பார்க்கமுடியும் (Nadarasan, 2007). இப்பிரிவு அவலமும் வேட்கையுமே, உலகில் பிறந்து தத்தளிக்கும் ஆன்மாவின் அவலக்குரலாக ஓங்கி ஒலிக்கிறது. மாணிக்கவாசகரின் குறிக்கோள் என்னவென்றால் எடுத்த காரியத்தில் விடாமுயற்சி வேண்டும். ஒரு காரியத்தில் வெற்றிபெற முதலில் விடாமுயற்சியும் அடுத்ததாகக் கடின உழைப்பும் தேவை.

இதில் மாணிக்கவாசகரின் உள்ளம் அவரின் குறிக்கோளை இறுகப்பற்றிக் கொள்கிறது.

"இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுகொள்

ஒற்றிலை என்னின் அல்லால்

விருந்தினை விடுதி கண்டாய்!"

மேலே குறிப்பிட்ட பாடல் வரியில் 'என்னை விற்கவோ, ஒற்றி வைக்கவோ உரிமைதரும் பத்திரம் உன்னிடம் தரப்பட்டுள்ளது' என்று சொல்லி மாணிக்கவாசகர் தன்னைச் சிவபெருமானிடம் ஒப்படைக்கிறார் (Nadarasan, 2007). இந்தத் திருவாசகத்தில் மனதுக்கு மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் அளிக்கின்றார். அந்த இறைவனின் திருவடியை விடாது பற்றல் வேண்டும் என்கிறார்.

## அகத்துறைக்கோட்பாடுகள்

ஊடல், உணர்த்தல், உணர்தல் என்பன அகவாழ்வில் காணப்படும் காதல் நெறிகள். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இறைவனுடன் பிணங்குகிறார் ஊடுகிறார் பிரிந்த தலைவன் நெடுநாளாகியும் வரவில்லையே என்பது தான் அவருடைய ஏக்கம். எனவே அவனை மனக்கண்ணாற் கண்டு, ஊடுகிறார். அவரே மனம் நெகிழ்ந்து ஊடல் உணர்கிறார். அதாவது ஊடலைக் கைவிட்டு, நெகிழ்ந்து மனம் ஒன்று படுகிறது. பக்குவப்படும் உயிரின் போராட்டத்தைத் தான், அன்பின் மாக்கதையாகத் திருவாசகம் பேசுகின்றது.

மாணிக்கவாசகர் மனதில் சிவபெருமானை எண்ணி மனம் உருகுதல், உருகிப்பாடுதல், நெக்குருகி ஆடுதல், அலறுதல், உலறுதல், ஊனெலாம் நின்றுருகுதல் பக்தி மெய்ப்பாடுகளாக உள்ளன.

"இமையறா அன்பு உனக்குஎன்

ஊடகத்தே நின்றுருத் தந்தருள்"

என்றும்

"ஊன் எலாம் நின்றுருகப் புகுந்தாண்டான்"

என்றும்

"என்புருகிப் பாடுகின்றிலை

கருத்தினுட் கசிந்துணர்ந்து"

எனவும் உள்ளம் உருகும் பெருங்காதல் உடையார் இறைவனை அடைதலையும் நெஞ்சுருகிப் படித்தால் கசியாத மனமே இல்லை எனவும் குறிப்பிடலாம். உள்ளம் உருகுதலை வெளிப்படுத்துவது உடம்பே ஆகும். எனவே உடம்பு, கண், செவி, மயிர்க்கால், நரம்புத்துளை, குருதியோட்டம் போன்றவற்றைச் சுட்டியே தனது உருக்கத்தை எடுத்துரைக்கிறார் (Nadarasan, 2007).

அழுதால் இறைவனைப் பெறலாம் என்பது இங்கே குறிப்பு. தன்தவறை உணர்ந்து அழுவதால் பாவம் கரைகிறது. அழுகை நெகிழ்ச்சி ஆணவ மலத்தைப் பொடிப் பொடியாக்கிக் கரைக்கிறது.

"பக்தி வலையில் படுவோன் காண்க"

என்பன மணிமந்திரங்கள் அதாவது மாணிக்கவாசகர் கூறும் மந்திரங்கள் என்ற நிலைத்த உண்மைகள் ஈசனை எவ்வாறு வேண்டினால் அடையலாம்? அவன் அருளை முதலில் நாட வேண்டும். அழுது கரைந்தால் அவனைப் பெறலாம். திருவாசகப்பாடல்களுள் உருகுதல், நெகுதல், கரைதல், கசிதல், உணர்தல், பெருகல், பருகல், அலறுதல், உலறுதல், ஆடுதல், பாடுதல் போன்ற பல பொருளுணர்ச்சியோடும் சுவையோடும் கையாளப்பட்டுள்ள இடங்கள் சொல்லப்போனால் நல்லநல்ல சொற்சித்திரங்களாகும். அவற்றைப் படிக்கப்படிக்கப் படிக்கும் மனமும் உடம்பும் நெகிழ்ந்து விடுகிறது (Nadarasan, 2007).

## உயிர் இரக்கக்கோட்பாடுகள்

இரக்கம், கருணை, பிற உயிர்களின் துன்பம் கண்டு அழுதல் போன்றவை மனிதனின் அடிப்படை பண்புகள். இந்த உயிர்இரக்கக் கோட்பாடுகள் திருவாசகத்தில் அதிக அளவில் காணக்கிடைக்கின்றன. நீயே வலியவந்து நின்பொற் கழலிணைக் காட்டியும் கொடிய வல்வினை என்னைக் காண ஒட்டாது தடுத்தும், என்னுடையப் பிறவிப் பிணியைக் கட்டுடன் அறுத்துக் கருணையினால் இறைவன் என்னை ஆட்கொண்டார் என்கிறார்.

“வெஞ்சேல் அனைய கண்ணார்தம்

வெகுளி வலையில் அகப்பட்டு

கைஞ்சேன் ஒர் துணை காணேன்”

இந்தப்பதிகத்தில் மாணிக்கவாசகப்பெருமான் அறுவருப்புள்ள இந்த ஊனுடம்பைப் “புழப்பொதிந்து, உளுத்து, அசும்பு ஒழுகிய பொய்க்கூரை”, எனவும் “மெய்ப்பால், நரம்பு கயிறு ஆக, மூளை, என்பு தோல் போர்த்த குப்பாயம் புக்கு இருக்ககில்லேன்” எனவும், என அருவருப்புடன் கூறி, இவ்விடம் கைவிட்டு அவன் திருக்கமலப்பாதத்தை அடைய வேண்டும் என்று மிகவும் ஆசைப்படுகிறார் (Nadarasan, 2007).

உலக இன்பங்களாகிய கீர்த்தி, நிதி, கல்வி, பதவி ஆகிய அனைத்தையும் அநுபவித்த அடிகளார் சிவபெருமானின் கருணை வெள்ளத்தில் கலக்க வேண்டுமென்று அடக்க முடியாத ஆர்வம் கொண்டவராய்த் தம் ஒவ்வொரு ஆன்மீகப் படியிலும் மேலும் மேலும் உயர்ந்து செல்கிறார்.

“ஊற்று மண்போல், நெக்கு- நெக்கு

உள்ளே உருகி, ஓலம் இட்டுப்

போற்றி நிற்பது என்று கொல்லோ!

என் பொல்லா மணியைப் புணர்ந்தே”!

என்ற இப்பாடலில் மாணிக்கவாசகர் புணர்ச்சி என்பதற்கு இறைவனுடன் ஆன்மா இரண்டறக் கலத்தல் என்பதாகும் (Nadarasan, 2007). இறைநெறியின் உயர்படியில் முடியாத விருப்புடனும் எங்கும் அலையாமல் பேரொளியில் கலக்க விருப்புடன் காத்திருந்தார். எம்பொருமான் என்னை ஏத்தி ஊற்று மணல் போல் உருகுவது எந்நாளோ? நெக்கு - நெக்கு உள்ளே உருகி ஓலமிட்டுப் போற்றிப்புகழ்வது என்றும் மன்றாடி வேண்டுகிறார். ஐம்புலன் வழி மனம் சிக்குண்டு இல்லாதிருந்தால் சிவத்தின் சிந்தையால் எளிதில் அறியமுடியும் என்பதே இப்பாடலின் மூலம் தனது இறைநெறியையும் உயிர் இரக்கத்தையும் வெளிபடுத்துகிறார்.

“பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே!

என்றும்

“கருணையே நோக்கிக் கசிந்து வளம் உருகிக்

கலந்து நான் வாழும் ஆறு அறியா

மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்

வருக என்று அருள் புரிவாயாயே”

என்றும் மனமிரங்கிப் பாடுகிறார் (Nadarasan, 2007).

ஒவ்வொரு பாடலிலும் தனக்கு எப்பற்றும் இல்லை என்றும் ‘என்னைக் கூவிக் கொண்டு அருள்’ என்றும், ‘ஊடுவது உன்னோடு, உவப்பதும் உன்னை’ என்றும், வாழ்கிலேன் கண்டாய் வருக என்று அருள் புரியாய்’ என்றும், ஐம்புலனும் சிந்தையும் உன் அடியிணைக்கே’ என்றும், பலவாறாகத் தன் உலக வாழ்க்கையை வெறுத்து அழுது இறைவன்பால் என்றும் எப்பொழுதும் இரண்டறக் கலந்திருத்தல் வேண்டுமென்னும் தன்னுடைய தவிர்க்க முடியாத விருப்பத்தைக் கூறி இறைவனிடம் மன்றாடுகிறார்.

“கல்லாத புல் அறிவின் கடைப்பட்ட நாயேனை,

வல்லாளனாய் வந்து, வனப்பு எய்தி இருக்கும் வண்ணம்

பல்லோரும் காண, என்-தன் பசு-பாசம் அறுத்தானை,

எல்லோரும் இறைஞ்சு தில்லை அம்பலத்தே கண்டேனே!”

என்றும்

“சாதி குலம் பிறப்பு என்னும் சுழிபட்டுத் தடுமாறும்

ஆதம் இலிநாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு”

என அடிகளார் எவ்வாறெல்லாம் ‘சாதி, குலம், பிறப்பு’ என்னும் சுழிப்பட்டுத் தடுமாறியதையும், பிணியினாலும், மூப்பினாலும் நேர்ந்த துன்பங்களையும், உறவினால் ஏற்பட்ட தளைகளையும், ‘யான் - எனது’ என்ற மாயமயக்கத்தினால் கலக்கமுற்று இருந்தார் போல் இப்பதிகம் தோற்றுவிக்கிறது. இவ்வாறு சோர்வற்று இருள் அடைந்த அடிகளார் வாழ்வில் இறைவன் ஞானக்குரவனாக வந்து ஞானதீக்கை அருளிய பின் அவர் வாழ்வின் இருள் விலகி ஆன்மாவின் தளைகள் எல்லாம் நீங்கிச் சித்தம் எனும் திண்கயிற்றால் இறைவனின் திருப்பாதத்தில் அவர் கட்டு விக்கப்பட்டார் (Nadarasan, 2007).

“மாயப் பிறவி உன்வசமே

வைத்திட்டு, இருக்கும் -அது அன்றி,

ஆயக்கடவேன், நானோ - தான்?

என்னதோ, இங்கு, அதிகாரம்”

அடிகளார் தன்னுடைய பிரார்த்தனையில் ஒரு படி முன் சென்று தன்னை முழுதுமாக இறைவனிடம் அர்ப்பணித்து விடுகிறார் (Nadarasan, 2007). தன்னுடைய இரக்க உணர்வின் சன்மார்க்க நெறியை இத்திருவாசகப்பகுதியின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

“புன்புலால் யாக்கை புரைபுரை கனிய

பொன் நெடும் கோயிலாப்புந்து, என்

என்பு எலாம் உருக்கி”

இவ்வாறு உணர்ச்சி வெளிப்பட மனம் நெகிழும் வாசகங்கள் திருவாசகத்தினுள் முழுவதும் பரவிக் கிடக்கின்றன (Nadarasan, 2007). இவ்வாறன மனம் நெகிழும் பாடல்களை மூவர்பாடிய தேவாரங்களில் கூடக்காணமுடிவதில்லை. பக்தி கொண்டு இறைவனைத் துதிப்பதற்குத் தேவாரப்பாடல்களை விடத் திருவாசகமே சிறந்ததாகும். டாக்டர்.ஜி.யு. போப் அவர்கள் “கிறித்துவ மக்களுக்கு எவ்வாறு ‘சங்கீதம்’ (PSA/SM) உள்ளாற்றலும் மறை ஆற்றலும் கொண்டு திகழ்கிறதோ அம்மாதிரியே, தென்னிந்தியாவில் திருவாசகம் பல தலைமுறையாகத் தமிழ் பேசப்பட்டு வரும் மக்களின் மனத்தைத் தொடுவதாக அமைந்திருக்கிறது.”. (Dr.G.U. POPE) என்று கூறுகிறார் (Mani, 2002).

## முடிவுரை

‘திருவாசகத்தில் இலக்கியக் கோட்பாடுகள்’ என்ற இக்கட்டுரையில் பக்தி இலக்கியங்களின் சிறப்புப் பற்றியும், திருவாசகத்தின் அமைப்புப் பற்றி விளக்கபெற்றுள்ளது. திருவாசகமோ ஒரு மனித ஆன்மா இறையுடன் கொள்ளும் உறவில் ஓர் இடையூறு ஏற்பட்டு, அவ்வுயிர் பிரிவுத்துயர் தாங்காமல் தான் செய்த தவறுக்களுக்காக நெக்குகருகி, வருந்தி அழுது அரங்கேறிய மாணிக்கவாசகரின் இறைநெறி பற்றியும் கூறப்பெற்றுள்ளது. மாணிக்கவாசகர் தம் அனுபவத்தை, உலக அனுபவமாக்கியே சமுதாயம் சார்ந்த சூழலில் கூற விழைகின்றார். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், சோதனைகள் விளைவுகள், தீர்வுகள் யாவும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏற்படும், அத்தகைய நிகழ்வுகளைத் தனி ஒரு மனிதரின் வாழ்க்கை அனுபவமாகவும் சமுதாயத்திற்கான அனுபவமாகவும் ஏற்கமுடிகின்றது.

அவருடைய ஆன்மீகப் பயணத்தில் கருணை, இரக்கம், அழுகை, துன்பம், மெய்யுணர்வுநிலை பற்றியும் பிறகு சிவபெருமானின் பிரிவாற்றமையைத் தாங்க முடியாது புலம்பியும். பின் இறைவனைக் கடும் முயற்சியில் கண்ணால் காணுவதும் அந்நிலையில் உயிர், உடல், மனம் அடையும் மாற்றங்களும், உயிர் இரக்கக் கோட்பாடுகளும் முன்வைக்கப்பெற்றுள்ளன. ஆக மொத்தத்தில் திருவாசகம் இறைநெறிக் கோட்பாடுகளையும், உயிர் இரக்கக் கோட்பாடுகளையும், அகத்துறை சார்ந்த காதல் நிலையில் இறைவனை வேண்டிப் புலப்பம்லையும், தனிமனித மற்றும் சமுதாயத்தின் அனுபவப்பிழிவாகவும் அமைந்துள்ளது என்பதே இந்த ஆய்வில் கண்ட முடிவாகும்.

## References


Mani, (2002) Thiruvasaga aaivuraikkalanjiyam, Thilagavathiyar thiruvarul athinanam, Chennai, India.

Nadarasan, (2007) Thiruvasagam, Uma Pahippagam, Chennai, India.

Thangavelan, (2006) Thiruvasagamum Thiruvarupavum, Bharathi Puthagaalaiyam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License